(4). அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி).

(ஆ) விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"பேரவையின் 41(3)-வது விதியின்கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

6. கவன ஈர்ப்புகள்.

(அ) பழமங்கலம் கிராம அரிசன காலனி தீ விபத்து குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் க. மருதாசலம், ரா. அய்யாசாமி, க. நாச்சிமுத்து ஆகியோர் பழமங்கலம் கிராமம் அரிசன காலனி தீ விபத்து குறிதது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"கோவை மாவட்டம் ஈரோடு அருகிலுள்ள பழமங்கலம் கிராம அரிசன காலனியில் 12-4-79 ஆம் தேதியன்று எற்பட்ட தீ விபத்தினால் 58 குடிசைகள் எரிந்து போனது பற்றி."

*திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): 11-4-79 அன்று மாலை சுமார் 5.30 மணிக்கு கோயம்புததூா மாவட்டத்தில், ஈரோடு வட்டத்தைச் சார்ந்த பழமங்கலம் மற்றும் குலவிளக்கு கிராமங்களைச் சேர்ந்த, சிற்றூராகிய கோயில் பாளையத்திலுள்ள, ஆதித் திராவிட மக்கள் வாழும் குடியிருப்பில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. செய்தி கிடைத்ததும், ஈரோடு வட்டாட்சியர் விபத்து நிகழ்ந்த இடத்திற்கு விரைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். தீ இரவு 10 மணி சுமாருக்கு அணைக்கப்பட்டது. நேரடி ஆய்விற்குப் பிறகு, அவர் வேளாண்மைத் தொழிலாளருக்குச் சொந்தமான 58 ஓலைக் குடிசைகள் முழுமையாக எரிந்து சாம்பலாயின எனக் கணக்கிட்டார். வட்டாட்சியர், பாதிக்கப்பட்டுள்ள மக்களைக்

[திரு. பி. முசிறிப்புத்தன்] [1979 ஏப்ரல் 26

கோயில்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த குலவிளக்கிலுள்ள ஆரம்பப் பள்ளியில் தங்கச் செய்து உணவுப் பொட்டலங்களும் வழங்க ஏற்பாடு செய்தார். இந்த விபத்து, ஒரு குடிசையின் எரியும் அடுப்பிலிருந்து வந்த தீப்பொறியில் ஏற்பட்டதெனத் தெரிகிறது. இந்த விபத்து தற்செயலாக ஏற்பட்டதெனக் கருதப்படுகிறது. உயிரிழப்போ, கால்நடை இழப்போ ஏற்படவில்லை. திருவாளர்கள் கணேசன், (வயது 25) மற்றும் சின்னப்பன் (வயது 30) தீ விபத்தில் சிறு காயங்கள் ஏற்பட்டு ஈரோட்டிலுள்ள அரசு மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டு குணமடைந்து வருகின்றனர். மொத்த பொருள் இழப்பு ரூ. 23,700/-என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடிசைகளைச் சீர் செய்வதற்காக, குடிசைப் புனரமைப்பு மானியமாக தலா ரூ. 100/-வீதம் 58 குடும்பங்களுக்கு, மொத்தம் ரூ. 5,800/- ஈரோடு வட்டாட்சியர் வழங்கியுள்ளார். ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 லிட்டர் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. குடிசைகள் மீண்டும் கட்டிக்கொள்ள ரூ. 2,000/-வரை தக்காவிக் கடன் வழங்க விதியிருப்பதற்கிணங்க, தேவையானோர்க்கு விதிகளின்படி ரூ. 2,000/வரை தக்காவிக் கடன் வழங்குதலையும் கருதுமாறு கோவை மாவட்ட ஆட்சியருக்கு அறிவுரையளிக்கப்பட்டுள்ளது.

2. தீயினால் பாதிக்கப்பட்ட இடத்தை 15-4-79 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சென்று பார்த்தார். பாதிக்கப்பட்ட மக்கள் நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்ளே, இந்தப் பகுதியில் வாழ்ந்துவரும் அரிசன மக்கள் மிகவும் ஏழைகள். ஆகவே, அமைச்சர் செயலாளர் அவர்கள், அறிவித்த அந்த 2,000 ரூபாயை உடனடியாக அவர்களுக்குத் தருவதற்கு ஆவன செய்வார்களா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): மாவட்ட ஆட்சியாளருக்கு அதற்கான உத்தரவு அனுப்பப் பட்டுள்ளது.

திரு. ரா. அய்யாசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் செயலர் அவர்கள் 2,000 ரூபாய் கடனாகக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அங்கு வசிப்பவர்கள் வசதியில்லாதவர்கள். அந்த ரூபாயை இலவசமாகக் கொடுக்க செயலர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): கடன் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.